செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்
26-11-2020 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது
கூட்ட நடவடிக்கைகள்

தலைமை செல்வி வே. நித்யா B.Tech, M.B.A,
தனி அலுவலர் அவர்கள்

மன்றப்பொருள்..

மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை எண். அ8/429/2020, நாள் 11.11.2020ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020 ன் கீழ் செங்கோட்டை நகராட்சி கேடி.சி டிப்போ கழிப்பறைக்கு போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 24.11.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி கேடி.சி டிப்போ கழிப்பறைக்கு போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கும் பணி | ரூ. 1.00 லட்சம் | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| | | | திரு.எம்.பரமசிவம் | மதிப்பீட்டை விட 1.03% கூடுதல் |

அலுவலகக்குறிப்பு.

1. மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் நிர்வாக அனுமதியினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த பட்ச விலைவிகிதமாக மதிப்பீட்டை விட 0.01% குறைவாக வழங்கியுள்ள திரு.தா.ஆபேல் ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான சசிவோத்தமா நீரேற்று நிலையத்தில் உள்ள 30 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் Standby (மாற்று மோட்டார்) மற்றும் ஸ்டார்டர் பழுதாகி உள்ளதால் குடிநீரின் அவசிய அவசரம் கருதி பழுது நீக்கம் செய்யவும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ. 85,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி வார்டு 1 காலாங்கரை பகுதிக்குச் செல்லும் குடிநீர் வியோக குழாயில் இணைக்குப்பட்டுள்ள நீர் உந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார் பழுதாகி உள்ளதை குடிநீரின் அவசிய அவசரம் கருதி பழுது நீக்கம் செய்யவும் உத்தேச செலவினம் ரூ. 10000/-ஐ நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மேற்படி பணியின் அவசிய அவசரம் கருதி மேற்கொள்ள அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம்.